## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 55/2016 | Date :08.07.2022. | RW1 |
|---|---|---|
| Name: வைதீஸ்வரன் | S/o. மாணிக்கம் | |
| Evidence Recorded Time: 12.31 P.M. to 12.45 P.M. | | |

6–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–

டாடா ஏசி வாகனம் TN 52 X 7852 என்ற வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் என்றால் சரிதான். 08.05.2016–ல் ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக இந்த டாடா ஏசி வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனத்தின் ஓட்டுநர் தன் மீது தவறு உள்ளதாக ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் அபராத தொகை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். லாரியின் பெயரிலோ, ஓட்டுநர் பெயரிலோ எவ்வித குற்றவழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்து பற்றி ஒரே ஒரு முதல் தவகல் அறிக்கை மட்டும்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் 6–ம் எதிர்மனுதாரரை பொறுத்து எவ்வித கடப்பாடும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –

நான் என்னுடைய நிறுவனத்தின் புலனாய்வு அதிகாரி கொடுத்த ஆவணங்கள் மற்றும் பாலிசி அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் புலனாய்வு அதிகாரியை நாங்கள் விசாரித்தோமா என்றால் விசாரித்தோம். இந்த வழக்கில் புலனாய்வு அதிகாரி விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். விபத்து நடந்தது மற்றும் மனுதாரருக்கு அடிப்பட்டது உண்மைதான். மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட மாங்காய்களை ஏற்றிக்கொண்டு நிறுவனத்தில் இறக்கிவிட்டு திரும்ப வரும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மாங்காய்களை பிளாஸ்டிக் டிரேவில் தான் ஏற்றிக்கொண்டு செல்வார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மனுதாரர் ஓட்டி வந்த வண்டிக்கு பின்னால் என்ன இருந்தது என்று தெரியாது. வண்டியின் கேபினில் ஓட்டுநர் மற்றும் மனுதாரர் ஆகிய இருவரும் பயணம் செய்தார்கள். மனுதாரர் மேற்படி வாகனத்தில் இலவச பயணியாத்தான் வந்தார் என்றால் சரியல்ல. வண்டியின் பின்னால் ஆட்கள் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் வண்டிக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் மூன்றாம் தரப்பினர்

என்றால் சரியல்ல. இந்த மனுதாரர் விபத்து ஏற்படுத்திய டாடா ஏசி வண்டியின் ஓட்டுநரா, உரிமையாளரா, காப்பீட்டுதாரரா என்றால் இல்லை. மூன்றாம் தரப்பினரும் இல்லை. மனுதாரர் மாங்காய் லோடு ஏற்றிக்கொண்டு பின்பு இறக்கி விட்டு பின்பு காலி பிளாஸ்டிக் கூடைகளோடு அவர் அந்த வண்டியில்தான் வந்தாகவேண்டும் என்றும் அதனால் அவர் இலவச பயணி இல்லை என்றாலும் சரியல்ல. விபத்தில் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – </u>இல்லை.**

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.